# இது நம்தேசம்

' Registered in the department of posts of srilanka under No QD/173/news/2014 '

பார்வை 02 | வள்ளுவர் ஆண்டு 2052 | மே 10 - 17, 2021 | பக்கங்கள் - 04

Web - www.ithunamthesam.com
mail - ithunamthesam@gmail.com


# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுத்தூபி உடைக்கப்பட்டது!



## இனப்படுகொலை பிரகடன நடுகல்லும் தூக்கப்பட்டது

முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த இனப்படுகொலை நினைவுத்தூபி உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் இனப்படுகொலை பிரகடனத்தை உள்ளடக்கி அங்கு அமைக்கப்படவிருந்த நடுகல்லும் இரவோடு இரவாக தூக்கிச் செல்லப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் பொது நினைவேந்தல் கட்டமைப்பால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் 1. முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டி போர்க் குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த 2. தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்திற்குரியவர்கள் என்பதையும், தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும், ஒரு போதும் பராதீனப்படுத்தப்படமுடியாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும், தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என்பதையும் கோர 3. தமிழர் இன அடையாள இருப்பின் மீது கட்டமைக்கப்பட்டுள்ள இனப்படுகொலையைத் தவிர்க்க என்ற 4 கோரிக்கைகளை உள்ளடங்கிய ஆறரை அடி உயரமும், மூன்றடி அகலமும் உடைய கருங்கல்லால் ஆன நடுகல்லொன்று அமைப்பதற்காக மே 15அன்று மாலையில் வாகனத்தில் அங்கு கொண்டு செல்லப்பட்டு இறக்கி வைக்கப்பட்ட நிலையில் அவ்விடத்தைச் சுற்றி பெருமளவில் இராணுவத்தி

ப. 2

## இனஅழிப்புச் செய்த படைகளுக்கு தேசமெங்கும் நினைவுச்சின்னங்கள் இனஅழிப்பிற்குள்ளான மக்களை நினைவுகூரமுடியாதா?

### முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி உடைப்பு தொடர்பில் கஜேந்திரன் எம்.பி!



முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் வைப்பதற்காக கொண்டுவரபட்டிருந்த பொது நினைவுக்கல் இரவோடு இரவாக காணாமல் போயுள்ளதுடன் முள்ளிவாய்க்கால் பொது நினைவுத்தூபியும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து முள்ளிவாய்க்கால் மண்ணிற்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராசா கஜேந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கனகரட்ணம் சுகாஷ், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன் , கட்சியின் உறுப்பினர்கள் சென்று நிலவரத்தைப் பார்வையிட்டுள்ளனர். இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்,

நேற்றிரவு முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலிக்காக கொண்டுவரப்பட்ட நினைவுக்கல் இன்று காலை காணாமல் போயுள்ளது. நினைவு முற்றமும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. நேற்று இந்த பிரதேசம் பொலீஸாரினதும் இராணுவத்தினரதும் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்ததுடன் வேறு யாரும் செல்ல

ப. 2


## இனப்படுகொலை இராணுவம் இப்போது திருடர்கள் என்ற பெயரை வாங்கியுள்ளது

**– சட்டத்தரணி சுகாஸ்**



இராணுவத்தை தவிர வேறு எவரும் இந்த அநாகரிகமான செயலைச் செய்திருக்க முடியாது. புதிதாக அமைக்க கொண்டு வந்த கல்லும் தூக்கிச் செல்லப்பட்டுள்ளது. இது சட்டத்தின் பிரகாரம் திருட்டு. இந்த திருட்டை இராணுவமே செய்தது என்று பிரதே ச மக்கள் கூறுகின்றனர். இதுவரை காலமும் இனப்படுகொலையாளிகள் என்ற பெயரை சூடிநின்ற இராணுவம் இப்போது திருடர்கள் என்ற பெயரை வாங்கியுள்ளது என முள்ளிவாய்க்கால் தூபி உடைக்கப்பட்டது தொடர்பாக சம்பவ இடத்திற்குச் சென்ற சட்டத்தரணியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டஆலோசகருமான கனகரட்ணம் சுகாஸ் ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு தடை!



## முல்லைத்தீவு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தது

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தலை அனுஸ்டிப்பதற்கு தடைகோரி மாங்குளம் மற்றும் மல்லாவிப் பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் நினைவேந்தலை நடத்த தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராசா கஜேந்திரன், முல்லை மாவட்டச் செயலாளர் கிந்துஜன், மல்லாவிப் பிரதேச செயற்பாட்டாளர் தங்கராசா நிறஞ்சன் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கே முல்லைத்தீவு நீதிமன்றம் இவ் தடைஉத்தரவை பிறப்பித்துள்ளது. கொரோனா தொற்றைக் காரணம் காட்டியும், புலிகளை நினைவுகூர்ந்து பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறார்கள் என காரணம் காட்டியே பொலிஸார் இத்தடையுத்தரவைப் பெற்றுள்ளனர். கடந்தவாரம் குருந்தூர் மலையில் விகாரை அமைப்பதற்கான நிகழ்வுகள் நடைபெற்ற போது கொரோனா பரவல் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாவில்லையா என பொதுமக்கள் விசனம் தெரிவிதுள்ளனர்.

## இனஅழிப்புச் செய்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கும் அனுமதிக்கப்பட்வில்லை. குறித்த சம்பவம் தொடர்பாக இப்பகுதி மக்களிடம் வினவியபோது இரவு அதிகாலை ஒருமணிக்கும் மூன்று மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இராணுவ சீருடை அணிந்தவர்களினால் அந்த கல் ஏற்றிச்செல்லப்பட்டதாக அறிய முடிகின்றது. நேற்றையதினம் கல்லை ஏற்றிவந்த மதகுருக்கள் , முள்ளளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவினர் பொலிஸாரால் நெருக்கடி கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருந்தனர். இந்நிலையில் பொலீஸாரும் இராணுவத்தினருமே நினைவுக்கல் களவாடப்பட்டமைக்கு பொறுப்புக்கூற வேண்டும்.

இன்று ஆட்சியிலுள்ள கோட்டபாய அரசாங்கம் தான் 2009 திட்டமிட்ட இனப்படுகொலை இடம்பெற்றபோது ஆட்சியில் இருந்தவர்கள். கோட்டபாயவே அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்தவர். இந்த திட்டமிட்ட இனவழிப்பிற்கு தமிழர்கள் சர்வதேச நீதியினைக்கோரி வருகின்றவேளை இன்று இந்த நினைவேந்தலைக்கூட செய்யமுடியாமல் இராணுவத்தினராலும் பொலீஸாராலும் நெருக்கடிகள் கொடுக்கப்பட்டு வருவது கண்டிக்கத்தக்கது. தமிழ் மக்கள் மீது இனவழிப்புச் செய்த இராணுவத்தினருக்கு தமிழர் தேசமெங்கும் நினைவுச்சின்னங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த மண்ணுக்கு சொந்தக்காரர்களான தமிழருக்கு, போரிலே படுகொலை செய்யப்பட்ட அவர்கள் உறவுகளுக்கு அவர்கள் மண்ணில் ஒரு நினைவாலயத்தை வைத்து வணக்கம் செலுத்த முடியாத ஒரு நிலை உள்ளதென்றால் அதற்கான பிரதானமான காரணம் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை ஒன்று நடைபெறாமல் உள்ளக விசாரணைக்கு பத்தாண்டு காலமாக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு தண்டனை வழங்குதலிலிருந்து தப்பித்து வந்ததன் விளைவாக தாங்கள் எதைச்செய்தாலும் அதற்காக பொறுப்புக்கூறத்தேவையில்லை என்கிற நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்ற நிலைமையில்தான் இந்த காடைத்தனத்தை செய்கின்றார்கள்.

குறிப்பாக இந்த கோட்டபாய அரசாங்கம் பதவியில் இருக்கின்ற பொழுதுகூட கடந்த மார்ச் 23ம் திகதி ஜெனீவாவிலே 46/1 தீர்மானம் என்ற அந்த உள்ளக விசாரணைத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டதன் எதிரொலியாகத்தான் நாங்கள் இந்த சம்பவத்தைப் பாஉக்கவேண்டி இருக்கின்றது.

ஆகவே இந்த சம்பவத்திற்கு இவ்வாறான ஒடுக்குமுறையை மேற்கொண்டு வருகின்ற இராணுவத்தினரும் பொலீஸாரும் பதவியில் இருக்கின்ற கோட்டா அரசாங்கம் மாத்திரமல்ல. இந்த அரசாங்கம் செய்த படுகொலைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்ல விடாமல் தடுத்து உள்ளக விசாரணைக்கு வாய்ப்புக்கொடுத்து சர்வதேச சக்திகளினுடைய தேவைக்காக தமிழாகளுடைய விவகாரம் பயன்படுவதற்குத் துணை நின்றவர்களும் இதற்குப்பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் இனப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஏற்பாட்டுக்குழுவினருக்கு இராணுவம் மற்றும் பொலிஸாரால் ஏற்பட்ட நெருக்கடிகளை அடுத்து அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டு காலையில் மீண்டும் அவ்விடத்திற்குச் சென்ற போது அங்கிருந்த நடுகல் மற்றும் அமைப்பதற்காக வைக்கப்பட்டிருந்த கட்டுமானப் பொருட்கள் அனைத்தும் தூக்கிச் செல்லப்பட்டுள்ளதுடன், அங்கிருந்த நினைவுத்தூபியும் உடைத்துச் சேதமாக்கப்பட்டிருந்தது.

இவ் உடைப்புச் சம்பவத்திற்கும் தமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர். தொன் கணக்கான எடை கொண்ட நடுகல்லை அங்கு குவிக்கப்பட்டிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரின் நடுவே யாரால் தூக்கிச் செல்லமுடியும் என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## முள்ளிவாய்கால் இனப்படுகொலை வாரத்தின் முதலாம் நாள் நினைவேந்தல்கள் யாழில்!

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 12ம் ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் முதலாம் நாள் நினைவேந்தல்கள் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் அனுஸ்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நினைவேந்தலில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டார்கள்.



யாழில் வீடொன்றில்...

மட்டக்களப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தலில் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஸ் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டார்கள்



வல்வெட்டித்துறையில் சிவாஜிலிங்கம்....






## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு தடைகோரி பொலிஸார் செய்த வழக்கில் தமிழர் தரப்பு சார்பாக சட்டத்தரணி காண்டீபன் முன்வைத்த வாதங்கள்!



முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் செய்வதை தடுப்பதற்காக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பொலிஸாரால் நேற்றைய தினம் தடை உத்தரவு கோரி தொடுக்கப்பட்ட வழக்கில் முதல் குரலாய் ஓங்கிஒலித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் நடராஜா காண்டீபன் அவர்கள்

- முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது 2009 இறுதி யுத்தத்தின் போது கொல்லப்பட்ட 147000 ஆயிரம் தமிழ் மக்களை நினைவு கூரும் நாளாக பார்க்க வேண்டும் இது பயங்கரவாத செயற்பாடு அல்ல கொரோணாவை காரணங்காட்டி நிகழ்வை தடுக்க கூடாது .
- குருந்தூர் மலையில் விகாரை அமைப்பதற்கு எந்தவகையில் அனுமதி வழங்கப்பட்டது அதேபோல் முள்ளிவாய்க்கால் நிகழ்வும்நடாத்துவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்
- ஒரே நீதிமன்றில் இரண்டு நீதிகளா? முல்லைத்தீவு நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் உள்ள முல்லைத்தீவு போலீசார் இரண்டு சட்டங்களை அமுல்படுத்த முயற்சிக்கின்றனர் சிங்கள பௌத்தர்களுக்கு ஒரு சட்டமும் தமிழ் மக்களுக்கு ஒரு சட்டத்தையும் நடைமுறைப்படுத்த முயற்சிப்பது எந்த வகையில் நியாயம்
- இரண்டு தினங்களுக்கு முன்பு குருந்தூர் மலையில் பௌத்த விகாரை அமைப்பதற்கு முயற்சிகள் நடந்தபோது முல்லைத்தீவு பொலிஸாரால் முறைப்பாடு செய்யச் சென்றவர்கள் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்டனர்

என்று இறுக்கமான வாதத்தை ஆரம்பித்துவைத்தவர் சட்டத்தரணி காண்டீபன்.

தொடர்ந்து சிரேஸ்ட சட்டத்தரணியும் பதில் நீதவானுமாகிய அன்ரன் புனிதநாயகம் அவர்கள் வாதத்தை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது முல்லைத்தீவு சட்டதரணிகளும் வழக்கில் ஆஜராகியிருந்தனர்

## முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இனப்படுகொலை வாரத்தின் 2ம் நாள் நினைவேந்தல்

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 12ம் ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் இரண்டாம் நாள் நினைவேந்தல்கள் முள்ளிவாய்க்கால் மண்ணில் நடைபெற்றது.



இந் நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்ட ஆலோசகர்களான சுகாஸ், காண்டீபன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டுசிறிலங்காவின்இனப்படுகொலையால் கொல்லப்பட்ட மக்களுக்கு தமது அஞ்சலி செலுத்தினார்கள்.



அந்நேரத்தில் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தைச் சூழ பெருமளவு இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

## இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு ஏனைய நாடுகள் ஆதரவு வழங்கவேண்டும்

**– அவுஸ்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்றத்தில் வலியுறுத்தல்**




இலங்கையில் தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு ஏனைய நாடுகள் ஆதரவு வழங்கவேண்டும் என்று அவுஸ்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்றத்தின் கீழ்சபையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனிநபர் பிரேரணையொன்றை முன்வைத்து உறுப்பினர் ஹுக் மெக்டெமொற் உரையொன்றை நிகழ்த்தியிருக்கிறார்.

இதன்போது இலங்கையில் தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்வதற்கான தலைமையை அவுஸ்திரேலியா வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும் அவர், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்நிறுத்துவதற்கு ஏனைய நாடுகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கோரியிருக்கிறார்.

# குமுதினி படகுப் படுகொலையின் 36ம் ஆண்டு நினைவில்.....

**நெடுந்தீவு !**

அது யாழ் குடாநாட்டின் நகர மையத்திற்கு மேற்கே 34 மைல்கள் தொலைவில் அமைந்துள்ள ஒரு அமைதியான தீவு.

10 சதுர மைல்கள் பரப்பினைக் கொண்ட தீவில் 1955ம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் பிற இடங்களில் இருந்து குடியேறி தமது வாழ்வினை ஆரம்பித்தனர். இப்போது பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்களையும் சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் கோரமான பதிவுகளையும் தன்னுள் சுமக்கிறது.

பொதுவாக இங்கு வாழும் மக்கள் தமது வாழ்வோடு ஒன்றித்துப்போன தேவைகள் சார்ந்த தவற்றில் தன்னிறைவு கொண்டிருக்கவில்லை. தேவைகளின் பெரும்பாலானவை யாழ்குடாநாட்டுடன் தொடர்பு பட்டிருந்த தீவகத்தின் குறிகட்டுவான் எனும் இடத்திற்கு சென்று நிறைவு செய்தனர்.

தீவையும் குறிகட்டுவானையும் பிரித்து இருந்த ஒன்பது மைல் தொலைவு கடலாகியிருந்ததால் தீவுக்கான அனைத்து தொடர்புகளும் கடல் மார்க்கமாகவே நிகழ்ந்தது. மக்கள் தமது அன்றாட கடல் மார்க்கமான போக்குவரத்து "குமுதினி" என்ற பெயர் கொண்ட படகு மூலமே மேற்கொண்டனர்.

தீவு வாழ்மக்களின் வாழ்வோடு ஒன்றித்துப்போன ஒரு இணைபிரியா அம்சமாகிப் போயிருந்தது. நாளுக்கு இரண்டு தடவை தீவின் மக்களை சுமந்து செல்லும் குமுதினி தீவின் நாளாந்த இயக்கத்திற்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் உயிர் நாடியாக உயர்ந்து நின்றது. அன்று தீவின் மக்களுக்காக வாழ்ந்த குமுதினி இன்று அரச பயங்கரவாதத்தின் இரத்த சாட்சியாகி உயர்ந்து நிற்கிறது. 15.05.1985 ...!

அன்றுதான் தீவு பூபாளத்தின் இனிமையை இறுதியாக சந்தித்தது.

அதன் பின்பு வந்தவைகள் எல்லாம் சோகத்தின் முகாரியாகவே கழிந்தது. அன்றைய காலைப் பொழுதில் குமுதினியும் வழமை போன்று தனது பணிக்கு தயாராகியது.




எப்போதும் போலவே எதிர்பார்ப்புகளாலும் தம்மைச் சுற்றிய நினைவுகளாலும் மனங்களை நிறைத்த மக்கள் கூட்டம் குமுதினியையும் நிறைத்தது. நேரம் காலை ஏழுமணியினைக் கடந்து கொண்டிருந்தது.

காலைப் பொழுதின் இனிமை கடற்காற்றின் இதம் கடல் நீரின் உப்புச்சாரல் எல்லாமே ஒன்றாகி மனதின் உணர்வுகளை மென்மையாக்கி நினைவுகளை அகல விரித்தது.

இயற்கையின் அரவணைப்பில் சுயத்தின் சோகங்கள் தற்காலிகமாகவேனும் மறந்து இருந்தனர் மக்கள். ஆனால் அந்த அமைதி நீடிக்கவில்லை.

அமைதியைக் குலைத்து இறங்கு துறையினை வந்தடைந்த படையினர் குமுதினியை சல்லடை போட்டுத் தேடினர். பயணிகள் கடுமையான விசாரணைக்குள்ளாகினர். சற்று நேரத்தின் முன்பு நிலவிய அமைதி இப்போது பதட்டமாக மாறியது.

முன்பு பல தடவை இத்தகைய கசப்பான அனுபவப் பதிவுகளுக்கு சொந்தமாகிப் போனவர்கள். பழையனவற்றுடன் இதனையும் வரவுவைத்துக்கொண்டனர்.ஆனால்அன்றைய நிகழ்வு மாறானதாகவே அமைந்தது.

இருப்பினும் தமக்கு நிகழப்போகும் அனர்த்தம் எதனையும் அப்பாவியான அவர்களால் அறிந்திருக்க நியாயம் இல்லை.

படையினரின் கெடுபிடிகள் முடிவுக்கு வந்த போது குமுதினி தனது பயணத்துக்கான நேரத்தை தவறவிட்டிருந்தது. இருந்தும் காலை 8.30 மணியளவில் தீவின் இறங்குதுறையில் இருந்து குமுதினி விடைபெற்றது.

ஆர்ப்பரித்தெழுந்த நீலக்கடலலை மெல்லக் கடந்த குமுதினியைப் பார்த்து இறங்குதுறை மௌனமாகி நின்றது.

தினமும் நிகழும் இப்பார்வையின் மௌனம் அன்று மட்டும் கனதியாகி இருந்தது.

ஆர்ப்பரித்தெழுந்த கடலின் மடியில் குமுதினி சென்று கொண்டிருந்தது. வெள்ளைக் கொக்குகள் குமுதினிக்கு மேலாக பறந்து தமது பார்வையினை விரித்து விட்டுப் போயின. சூரியனின் ஒளிக்கீற்று அன்று சற்று வெப்பமாக இருந்தது. நயினைக் கடலில் குமுதினி சென்று கொண்டிருந்தது.

அப்போதுதான் கடலம்மாவின் இதயத்தைக் குதறியவாறு சிறீலங்காவின் கடல் வல்லூறுகள் வந்து கொண்டிருந்தது. குமுதினியின் கண்களுக்குத் தெரிந்தது. எதனையுமே விபரீதமாக பார்க்கத் தெரியாத ஏதுமறியா அப்பாவிகளின் பயணம் தொடர்ந்தது.

ர்

தூரத்தில் தெரிந்த கடல் வல்லூறுகள் இப்போது குமுதினியை நோக்கிப் பாய்ந்து வந்தன. தாய் வல்லூறுக்குத் துணையாக வந்திருந்த இரண்டு வல்லூறுகள் வேகமாக வந்து குமுதினியை வழிமறித்தது.

ஆர்ப்பரித்தெழுந்த கடல் மாதாவின் மடியில் குமுதினி மௌனமாகியது. கடல் மாதாவின் இதயத்தைக் குதறிய தாய் வல்லூறு குமுதினியை நெருங்கி வந்து கொலை வெறிபிடித்த கொடூரமான தனது பார்வையால் குமுதினியை குதறியது.




பார்வையின் கொடூரத்தைப் பொறுக்காத கடலம்மா தனது அலைக்கரங்களால் ஓங்கியறைந்து கரைகளில் வந்து மோதினாள். இருந்தும் வல்லூறு பணியாது கோபம் கொண்டு ஆடியது. நிகழப் போகும் விபரீதத்தினை உணர்ந்து கொண்ட பயணிகள் நிதானிப்பதற்கிடையில் அது நிகழ்ந்தது. தாய் வல்லூறு குமுதினியை வழிமறிக்க குட்டி வல்லூறுகளில் இருந்து கறுப்பு நிற உடையணிந்த 06 பேய்கள் கைக்கோடாரிகள் , வாள் , இரும்புக் கம்பிகள் போன்ற கூரிய ஆயுதங்களுடன் குமுதினியுள் பாய்ந்தனர். தமது அன்றாட வாழ்வின் தேவை தேடி கடல் வழியில் பயணிப்பவர்களால் என்னதான் செய்யமுடியும் ?



கடல் பேய்களிடமிருந்து தப்பிப்பதற்கு வழி ஏதும் அங்கு இருக்கவில்லை. கடல் ஆர்ப்பரித்துக் கொண்டது.

அப்பாவிப் பயணிகளால் ஏதும் இயலாது போனது. தமது இயலாமையினை நாம் அப்பாவிகள் எம்மை ஒன்றும் செய்யாதீர்கள் என அவலக் குரல் எழுப்பினர். ஆனால் கொலை வெறிபிடித்த கடல் பேய்கள் முன்னால் கதறல்களும் புலம்பல்களும் தோற்றுப் போயின. கொச்சைத் தமிழின் உச்சரிப்பில் உரக்க நாமம் எழுப்புமாறு கடல் பேய்களிடம் இருந்து கட்டளை பிறந்தது.

அப்பாவிப் பயணிகள் கொடூரமான ஆயுதங்கள் முன்னால் பெற்றோரும் சுற்றத்தாரும் கூடி பெருமையுடன் சூட்டிய நாமத்தினை தயங்கித் தயங்கி கூனிக்குறுகி உச்சரிக்க அந்தக் கொடூரம் நிகழ்ந்தேறியது.

பெற்றோர்கள் முன்னால் பின்னைகள், பிள்ளைகள் முன்னிலையில் பெற்றோர்கள், சகோதரர்கள் முன்னிலையில் சகோதரிகள் துடிக்கத் துடிக்க கொலை வெறி கொண்ட கடற்பேய்களின் கூரிய ஆயுதங்களினால் வெட்டியும் குத்தியும் குதறப்பட்டு சரிக்கப்பட்டனர். சரிந்தவர்கள் பலர் கடலுக்கு இரையாகினர்.

குமுதினியில் இருந்து எழுந்த எம் உறவுகளின் மரண ஓலம் எவருக்கும் தெரியாது அன்று வீசிய சோளகக்காற்றுக்குள் சுற்றி சுழன்று போனது.

புத்த பெருமானின் வழித்தோன்றல்களால் எம் உறவுகள் குதறப்பட்ட அந்த இறுதிக்கணம் பச்சிளம் பாலகி சுபாஜினி விஸ்வலிங்கம் எதைத்தான் எண்ணியிருப்பாளோ..?

என்ன நிகழ்கிறது என்பது எதனையும் அறிந்திராத அந்த பிஞ்சு மழலை இந்த உலகத்தினை கண் திறந்து பார்த்து ஏழு மாதங்கள் மட்டுமே நிரம்பியிருந்தது. அந்த மழலையால் கூட அன்பையும் அறநெறியையும் போதித்த புத்த பெருமானின் வாரிசுகளான அவர்களிடமிருந்து எதனையும் பெறமுடியாது போனது.

ஏதும் அறியாத இந்த மழலை மேனியும் முக்கூர் முனை கொண்ட ஆயுதத்திற்குப் பலியாகிப்போனது. ஒன்றரை மணி நேரமாக குமுதினியைக் குதறியவர்கள் நடுக்கடலில் கைவிட்டு அங்கிருந்து மறைந்தனர். முன்பெல்லாம் தீவின் மக்களை சுமந்த குமுதினி அன்று அவர்களின் குருதியையும் சுமந்தது. குமுதினியில் இருந்து வடிந்த குருதியினால் கடல் அன்னை சிவப்பாகிப் போனாள்.

உச்சத்தில் நின்றிருந்த சூரியனும் நயினையில் வீற்றிருந்த புத்தபகவானும் நடுக்கடலில் நிகழ்ந்த கொடூரத்தினை மனதினுள் புதைத்துக் கொண்டு மௌனமாகினர். எப்போதும் காலையிலேயே குறிகட்டுவான் இறங்கு துறையினை வந்தடையும் குமுதினி அன்று வரவில்லை. மதியத்தில் பிறிதொரு படகின் துணையுடன் வந்தடைந்த போதும் அவசர அவசரமாக வெளியேறும் மக்கள் கூட்டத்தினை அன்று காணவில்லை.

அவர்கள் சடலங்களாக மட்டுமே வந்து இருந்தனர். குமுதினி மௌனமாகிப் போ



னதால் தனிமையான தொலை தீவில் வாழ்ந்த மக்களுக்கு தமது உறவுகளின் மரணங்கள் கூட கிட்டாது போனது. பலநூற்றாண்டுகளுக்கு முன்பு தாமத்தின் முறையிலும் நீதியின் சார்பாகவும் திகழ்ந்து இலங்கையினை ஆட்சி புரிந்த தமிழர்களின் மன்னன் எல்லாளன்.

அந்த உத்தமனின் நாமத்தினை நினைவாக்கும் எல்லாளா எனும் பெயர் கொண்ட கப்பலினையே இப்பாதக செயலுக்கு சிங்கள அரச பயங்கரவாதம் பயன்படுத்தி எல்லாளனின் நாமத்தில் அழியாத வடுவினையும் பதிவாகியது.

சிங்களத்தின் ஆட்சியாளரின் ஆசீர்வாதத்தோடு காரைநகர் கடற்படைத் தளத்தில் இருந்து வந்திருந்த கடல் பேய்களின் கப்டன் யு.ஐ.ஜெயவர்த்தனா தலைமையில் நிகழ்த்தப்பட்ட படுபாதகத்தில் 7 மாதப்பச்சிளம் பாலகி சுபாஜினி விஸ்வலிங்கம் 70 வயது தெய்வானை



யோடு 36 அப்பாவி பயணிகள் குமுதினியில் சடலங்களாகவும் 71 பயணிகள் மரண காயங்களோடும் மீட்கப்பட்டனர். கசப்பான அந்த அனுபவப் பதிவில் உயிர்பிழைத்தோர் நிகழ்ந்த கொடூரங்களை பக்கம் பக்கமாக அறிக்கைகளாக உலகுக்கு வெளிப்படுத்தினர்.

ஆனாலும் அடைந்த பலன் ஏதும் அல்ல. உலகமும் கொடூரங்களாக நோக்காது வெறும் அறிக்கைகளாகவே நோக்கியது.

துயர வடுக்களைச் சுமந்த மக்களுக்கு நிகழ்ந்த மற்றும் ஒரு அவலமாக அமைந்தது.

36 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களின் மனங்களில் பதிவாகிய மனது நினைக்க மறுக்கும் அன்றைய நாளினை ஒரு தடவை மீண்டும் நினைத்துப் பார்க்கிறோம்.

ஓவென ஆர்ப்பரித்தெழும் நயினைக்கடலும் வேகமாக சுழன்றடித்து வீசும் சோளகக் காற்றும் இன்றைய நவீன உலக ஒழுங்கிற்கு புரியாத செய்தி ஒன்றைச் சொல்லுகிறது. உலகமே உங்களுக்கு குமதினியைத் தெரிகிறதா..?

நீலக்கடல் ஏன் சிவப்பானது எனப் புரிகிறதா..? கண்திறந்து ஏழு மாதங்களே நிரம்பிய பச்சிளம் பாலகி சுபாஜினியைத் தெரிகிறதா..?

36ஆண்டுகளுக்கு முன்னர் தீவின் நாளாந்த இயக்கத்திற்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் உயிர் நாடியாகி உயர்ந்து நின்ற குமுதினி 32ஆண்டு கடந்தும் இன்னும் சிறீலங்கா அரச பயங்கரவாத இனப்படு கொலையின் இரத்த சாட்சியாக உயர்ந்து நிற்கிறது.





## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக அறிக்கை

15-05-2021

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவேந்தல்

தமிழர் தேசத்தை சிதைக்கும் நோக்கத்துடன் தமிழினத்துக்கு எதிராக சிறிலங்கா அரசு தொடஉச்சியாக மேற்கொண்டுவந்த இனவழிப்பு யுத்தமானது 2009ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி முள்ளிவாய்க்காலில் அதன் உச்சக்கட்டத்தை அடைந்து தமிழ் இனப் படுகொலையாக சர்வதேசத்தினதும் மனச்சாட்சிக் கதவுகளை உலுக்கியிருந்தது. இவ்வாறு சர்வதேச சட்ட ஏற்பாடுகளுக்கு மாறாகவும் யுத்தநெறிமுறைகளுக்கு முரணாகவும் மனிதத்துவத்துக்கு எதிராகவும் சிறிலங்கா அரசினால் முள்ளிவாய்க்காலில் தமிழினம் கொத்துக்கொத்தாக கொன்றொழிக்கப்பட்டமையை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவேந்தல் வாரம் அதன் 12 ஆம் ஆண்டு நினைவு வாரமாக நினைவுகூரப்படடு வருகின்றது.

தமிழின உரிமைப் போராட்டத்தினை பயங்கரவாதமாக சித்தரித்துக்கொண்டு சிறிலங்கா அரசினால் காலம் காலமாக கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளையும், 2009 முள்ளிவாய்க்காலில் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டும், பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டும், இளைஞர்கள், யுவதிகள் என ஆயிரக்கணக்கானோர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டும், பல ஆயிரக்கணக்கானோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டும் சுமார் ஒரு லட்சத்து நாற்பத்தாறாயிரத்து எழுநூறுக்கும் அதிகமான தமிழ் மக்கள் இனவழிப்பு செய்யப்பட்டதை தமிழினம் நினைவுகூரும் நாட்கள் இவையாகும்.

இவ்வாறு தமிழர்களின் உரிமைப் போராட்டம் 2009இல் தமிழின அழிப்பு யுத்தம் மூலமாக மௌனிக்கப்பட்டதன் பின்னர், தமிழ் மக்கள் மீதான இனவழிப்பு நீதிக்கான போராட்டத்தினை அடக்கியொடுக்கும் வகையில் சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் ஒடுக்குமுறைகளுக்கு அடிபணியாது அவற்றுக்கு எதிராகவும், கட்டமைப்புசார் இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நாம் மக்களை அணிதிரட்டி ஜனநாயக வழிமுறைகளில் போராடிவருவதுடன் சிறிலங்கா அரசினது அனைத்து அச்சுறுத்தல்களையும் தாண்டி முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புக்கு நீதி வேண்டி ஒவ்வொரு வருடமும்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
ALL CEYLON TAMIL CONGRESS
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
TAMIL NATIONAL PEOPLE'S FRONT

முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தலை பொது அமைப்புக்களோடும், மக்களோடும் இணைந்து கூட்டாக முன்னெடுத்தும் வந்துள்ளோம்.

தற்போது முழுஉலகையும் உலுக்கிவரும் கொவிட்-19 பேரழிவுப் பெருந்தொற்று அலை, இராணுவ மயப்படுத்தப்பட்ட சிறிலங்கா அரசினது நிர்வாகக் கட்டமைப்பின் இயலாமையினால், முழு இலங்கை மக்களையும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. கொவிட் 19 பரவலை கட்டுப்படுத்துவதில் அரசின் தோல்வியினை சுகாதாரத் துறையினர் குற்றஞ் சாட்டிவரும் அதேவேளை நாட்டில் சடுதியாக கொவிட் மரணங்களும் அதிகரித்துச் செலவதனால் கொவிட்-19 அலை தொடர்பாக சுகாதாரத்துறையினர் மிகக் கடுமையான எச்சரிக்கைகளை விடுத்தும் வருகின்றனர். ஆனால் அரசாங்கமோ கொவிட்-19 அலை காரணமாக நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைகளை மூடிமறைத்து மக்களை தவறாக வழிநடாத்தி வருவதுடன் அரசின் தோல்வியை மூடி மறைக்க, சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைத் விதைத்து தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களைத் தூண்டி இராணுவ அனுசரணையுடன் இனவாத செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. மேலும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்புக்கு பெரும் சவாலாக கொவிட்-19 அலை உருவெடுத்துள்ள நிலையில் சிறிலங்கா அரசினால் முடக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு தாயகப் பிரதேசங்களில் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளை பல நாட்கள் கடந்தும் வழங்க முடியாது சுகாதாரத் துறையினர் திண்டாடுகின்றனர். இப்பிரதேசங்களில் பொது மக்களுக்கான தடுப்பூசிகளை அரசு இன்னமும் வழங்கியிருக்கவுமில்லை. இவ்வாறு தொற்று அதிகரித்துள்ள தாயகப் பிரதேசங்களில் பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வளங்களை தேவைக்கேற்ப வழங்காது தொற்றாளர்கள் அனைத்து இடங்களுக்கும் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாது நடமாடும் அபாய நிலையை அரசு வேண்டுமென்றே தமிழர் தாயகப்பிரதேசங்களில் தோற்றுவித்துள்ளதா, முள்ளிவாய்க்கால் இன அழிப்பையொத்த இன்னொரு இன அழிப்பு யுத்தத்தை சிறிலங்கா அரசு கொவிட்-19 பெருந்தொற்றின் மூலம் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிட்டுள்ளதா என்ற சந்தேகங்கள் மக்கள் மத்தியில் வலுவாக எழுந்துள்ளது.

இன்றைய நெருக்கடியான சூழலிலும் தொடஉந்து முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நினைவுகூர்வதன் மூலம் 21ம் நூற்றாண்டின் மனிதப் பேரவலத்தை உலகறியச்செய்வதும் அடுத்த தலைமுறைகளுக்கு அதனைக் கடத்துவதும் எமது தலையாய கடமையும் பொறுப்புமாகும். மேலும் கொவிட்-19 பரவலை கட்டுப்படுத்துவதில் தோல்வி அடைந்துள்ள அரசு, கொவிட்-19 தொற்றிலிருந்து தமிழ் மக்களை பாதுகாக்க விசேட அக்கறை செலுத்தும் என எதிர்பார்க்க முடியாது. எனவே கோவிட் 19 பேரழிவுத் தொற்று வேகமாக பரவி வரும் நிலையில் பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைமையாய் எமது மக்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும் எமக்குண்டு.

இந்நிலையில் முள்ளிவாய்க்காலில் கொன்றொழிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினூடாக இனவழிப்புக்கான நீதியை வேண்டி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில், இனவழிப்பின் சாட்சியங்களாய் எமது ஆத்மாவை தினமும் உலுப்பிக்கொண்டிருக்கும் கொடூரமான இனவழிப்புச் சம்பவங்களை நினைந்து கறுப்புக்கொடிகளை பறக்கவிடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். இறுதிநாளான 2021.05.18 ஆம் திகதி பொது இடங்களிலும், இல்லங்களிலும் ஒன்றுசேர்வதைத் / ஒன்றுகூடுவதைத் தவிர்த்து கோவிட் 19 பரவல் தடுப்பு விதிமுறைகளுக்கு அமைவாக முக்கவசங்கள் அணிந்து சமூக இடைவெளியைப் பேணியவாறு ஒவ்வொருவரும் தனித்தனியாக விளக்கேற்றியும் அஞ்சலிக்குமாறு கோருகின்றோம். அத்துடன் முள்ளிவாய்க்காலில் எமது மக்கள் அனுபவித்த பட்டினிச் சாவை நினைவு கொள்ளும் வகையில் கஞ்சியினை பரிமாறி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நினைவுகூரும் இவ் வரலாற்றுக் கடமைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு எமது மக்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம். ஓரிடத்தில் ஒன்று கூடி நினைவேந்துவதே எமது கூட்டுரிமையாகும். எனினும் இம்முறை கொவிட் 19 ஆபத்து நிலையில் ஓரிடத்தில் ஒன்று கூடுவதிலுள்ள ஆபத்தினை கருத்திற் கொண்டு தனித்தனியாக நினைவேந்தலை மேற்கொண்டாலும், இந்நினைவு கூரல் நிகழ்வுகள் மூலமான கூட்டுப் பிரக்ஞையை வெளிப்படுத்தும் முகமாக அவற்றை சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் பகிர்ந்து கொள்ளுமாறும் அன்புரிமையுடன் வேண்டுகின்றோம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
தலைவர்,
செல்வராசா கஜேந்திரன்
பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## காஸாவில் சர்வதேச ஊடக அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடத்தில் இஸ்ரேல் தாக்குதல்



காஸாவில் சர்வதேச ஊடகங்களின் அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடத்தை இஸ்ரேல் விமானத்தாக்குதல் மூலம் தாக்கி அழித்துள்ளது.

12 மாடி அல்ஜலாலா கட்டடம் தரைமட்டமாகும் வீடியோவை அல்ஜசீரா வெளியிட்டுள்ளது. குறிப்பிட்ட கட்டிடம் இடிந்து வீழ்வதை காணொளியில் காண முடிகின்றது. குறிப்பிட்ட கட்டித்திலேயே அல் ஜசிரா, அசோசியேட்ட் பிரஸ் போன்ற சாதேச ஊடக நிறுவனங்களின் அலுவலகங்கள் உட்பட பல முக்கிய நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன. இந்த கட்டிடத்தை தகர்ப்பதற்கு முன்பாக எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

உயிரிழப்புகள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.